Remuneration for Prosperity Brigade Volunteers.

* 346 *Q.* THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state :—

(*a*) whether it is a fact that remuneration is being paid to the Prosperity Brigade Volunteers, for (1) distributing nutritious bread and (2) regulating passenger traffic in buses in Madras City ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) ஆம்.

(இ) ஒவ்வொரு நிலயத்திற்கும் சத்துணவு வழங்க குறைந்த பட்சம் 200 குழந்தைகளாவது தேவை. ஒவ்வொரு நிலயத்திலும், பொறுப் பேற்றிருக்கும் அமைப்பாளருக்கும், உதவியாளருக்கும் முறையே ஒவ் வொரு குழந்தைக்கு ஒவ்வொரு மாதத்திற்கு 10 காசுகள் வீதமும் 5 காசுகள் வீதமும், மதிப்பு ஊதியம் தரப்படுகிறது.

சென்னை நகரில் நெரிசல் அதிகமாக உள்ள பேருந்து நிலயங்களில் பேருந்துப் பயணிகளை வரிசையாக நிறுத்தி ஒழுங்கு படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள சீரணித் தொண்டர்களுக்குப் பணிபுரியும் நாட்களில் நாளொன் றுக்கு ரூ. 3 கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, பேருந்து நிலயங்களில் நெரிசல் வேளைகளில் சீரணித் தொண்டர்கள் கண்டக்டர்களுக்கு உதவியாக இருக்கும்போது, சில சமயங்களில் இரண்டு பேருக்கும் மோதல் ஏற்படு கிறது. அதைத் தவிர்க்க, சீரணித் தொண்டர்களுக்குப் பதிலாக பேருந்து இலாகாவில் உள்ள ஊழியர்களே இந்த வேலையைச் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து முன்பு இருந்தது. இப்போது இரு தரப்பினரும் ஒற்றுமையாகப் பணியாற்றுகிறார்கள்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இப்படிப்பட்ட சீரணித் தொண்டர்களின் சிறப்பான சேவையைக் கருதி, அவர்களை பேருந்து இலாகாவில் நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்கும் திட்டம் அரசாங்கத் திடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தற்போதைக்கு அதுபோன்ற திட்டம் இல்லை. எதிர் காலத்தில் அதுபற்றிப் பரிசீலனை செய்யலாம்.

1973 மார்ச் 13]

திரு. வை. பாலசுந்தரம் : இந்தச் சீரணித் தொண்டர்களுக்கு எல்லாவிதமான பயிற்சிகளும் நல்ல முறையில் தரப்படுகின்றன. ஆனால் துப்பாக்கிச் சுடுகின்ற பயிற்சி தரப்படவில்லை. ஆகவே, அவர்களுக்கு அந்தப் பயிற்சியை அளிப்பதற்கும் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கனம் உறுப்பினரவர்கள் சொன்ன கருத்து இப்போதுதான் தெரிய வருகிறது. அப்படிப்பட்ட திட்டம் ஒன்றும் அரசிடம் இல்லை.

திரு. கோ. இளங்கோவன் : இந்த சீரணித் தொண்டர்களை வேறு வேலைகளில் பயன்படுத்தும் திட்டம் எதுவும் அரசிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : வேறு திட்டங்களுக்கும் அவர்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறார்கள். அதோடு இந்தத் திட்டமும் கூடுதலாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

திரு. த. சோலையா : தலைவரவர்களே, செலவுகள் அதிகமான இந்தக் காலத்தில் சீரணித் தொண்டர்களுக்கு மூன்று ரூபாய்தான் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அது அவர்களுக்குப் போதாது. அதிலும் இந்த மூன்று ரூபாயாவது அவர்களுக்குத் தொடர்ந்து கிடைக்க வசதி இருக்கிறதா ? இல்லையென்றால் எத்தனை நாள் கொடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அவர்கள் பணியாற்றும் நாட்களில் மட்டும்தான் இந்த மூன்று ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகிறது. இப்போது கொடுக்கப்படுகின்ற இந்த ஊதியத்திற்கே அரசியல் பிரச்சினை கிளப்பப்படுகிறது. ஆகவே, அதிமாகக் கொடுக்கும் உத்தேசம் இல்லை ; இப்போது கொடுப்பதே போதும் என்று அரசு கருதுகிறது.

திரு. எம். சுரேந்திரன் : சார், வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே வருகின்ற இந்த நேரத்தில், முழு நேரம் வேலை இல்லை ; பாதி நேரம் வேலை ; வேலை நேரத்தில் மட்டும் சீரணித் தொண்டர்களுக்கு ஊதியம் வழங்குவது என்றால் அது இன்னும் வேலை இல்லாதவர்களின் எண்ணிச்கையைக் கூட்டுவதற்கு உதவுவதாக அமையாதா ? அதை அரசாங்கம் ஆராயுமா ?

மாண்புமிகு திரு என். வி. நடராசன் : வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பெருக்கவேண்டும் என்பதற்காக இந்தத் திட்டம் கொண்டுவரப் படவில்லை. சமுதாயத்தின் உயர்வுக்குத் தங்கள் உழைப்பை தானம் செய்வது என்ற முறையில் தான் இந்தத் திட்டம் செயல்பட்டு வருகிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, தமிழ் நாட்டில் சீரணிப் படையில் பெண்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது மூலக் கேள்விக்கு சம்பந்தப்பட்ட துணைக் கேள்வி அல்ல. இப்படிக் குறிப்பாக புள்ளி

விபரம் கேட்டால் அமைச்சர்களால் எப்படிப் பதில் சொல்ல முடியும்? ஆகவே, இதற்கு அமைச்சரவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்ற அவசியம் இல்லை.

Manufacture of measuring tapes.

* 347. *Q.* THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Government have issued any warning on the manufacture of measuring tapes by private bodies in October 1972; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) & (இ): அங்குல அளவை நாடா அல்லது அங்குலம், மெட்ரிக் அளவுகள் கொண்ட அளவை நாடாக்கள் ஆகியவற்றைத் தயாரித்தல், விற்பனை செய்தல், வாங்குதல், பயன்படுத்துதல் ஆகியவை 1956-ஆம் ஆண்டு தர எடை—அளவைகள் சட்டம், தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு எடை—அளவைகள் செயற்படுத்துதல் சட்டம் ஆகியவற்றை மீறியதாகும் எனவும், இத்தவறு களைச் செய்பவர்கள் தங்கள் மீது வழக்கு தொடரப்படுத்துவதற்குட்பட்ட வராவார்கள் எனவும் ஒரு அறிக்கையை 1972 அக்டோபரில் அரசு வெளியிட்டது.

Students of Fisheries Technology.

* 348 *Q.* THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that the students of the Fisheries Technology of the Central Polytechnic, Adyar, have gone on hunger strike in November 1972; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) மீனளத் தொழில் நுட்பவியல்—கப்பற்கலையியல் வகுப்பு மாணவர்கள் (1-வது, 2-வது ஆண்டு மாணவர்கள்), தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி 20–11–1972-லிருந்து உண்ணாவிரதம் இருந்தனர். மீனளத்துறைத் துணை இயக்குநர், தொழில் நுட்பக் கல்வி இணை இயக்குநர், மத்திய பல் தொழில் பயிற்சிப் பள்ளி முதல்வர் ஆகியோர் மாணவர்களின் கோரிக்கைகள் மீது அவசியமான விளக்கங்கள் கொடுத்த பின்னர், மாணவர்கள் 21–11–1972 அன்று உண்ணா விரதத்தைக் கைவிட்டனர்.